RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224s-22273

OPEN ACCESS

# அற இலக்கியப் பெண்கள் இரட்டைக் காப்பிய பெண்கள் அறம்பாடுதலின் ஒப்பீடு

**கோ. கமலா [அ, *], க. செந்தில்ராஜா [அ]**

[அ] தமிழாய்வுத்துறை, தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்லூரி (தன்னாட்சி), (பாரதிதாசன் பல்கலைக் கழகத்துடன் இணைவு பெற்றது), பெரம்பலூர் 621220, தமிழ்நாடு, இந்தியா

# A comparison of moral literary women's two epic women's moral singing

**G. Kamala [a, *], K. Senthilraja [a]**

[a] Department of Tamil, Thanthai Hans Roever College (Autonomous), (Affiliated to Bharathidasan University), Perambalur- 621220, Tamil Nadu, India

* Corresponding Author: kamalatamil1986@gmail.com

Received: 20-10-2022
Revised: 07-11-2022
Accepted: 14-11-2022
Published: 01-12-2022

**ABSTRACT**

Man has better thinking capacity than other beings. Today he does not remember what happened yesterday and leads to life. In course of time, he writes down the true experiences he has witnessed in the book. The books containing the experiences thus written are the books of ethics. These scriptures teach the morality, civilization, culture, good habits and ethics of life of the people. The books which deal with the principles of ethics in the eighteen lower 18 accounts are the books of ethics. The twin epics Silappathakaram and Manimekalai arose during the dark ages when the scriptures arose. Domesticity, hospitality, domestic work, compassion, and appreciation of love are compared and examined in the ethics of the women of moral literature and the double epic women.

**Keywords:** Silappathakaram, Manimekalai, Ethics, Moral

## முன்னுரை

பிற உயிர்களை விட மனிதன் சிறப்பான சிந்திக்கும் ஆற்றலை கொண்டவனாக இருக்கிறான். நேற்று நடந்ததை இன்று நினையாமல் ehisa வாழ்விற்கு வழிவகுத்துக் கொள்கிறான். காலப்போக்கில் தான் கண்ட உண்மை அனுபவங்களை ஏட்டில் எழுதிச் செல்கிறான். இவ்வாறு எழுதப்பட்ட அனுபவங்களை கொண்ட நூல்கள் தான் அறநூல்கள். இந்த அறநூல்கள் மக்களின் ஒழுக்கம், நாகரிகம், பண்பாடு, நல்ல பழக்க வழக்கங்கள், வாழ்வியல் நெறிகள் ஆகியவற்றை போதிப்பவையாக திகழ்கிறது. இவ்வாறான அறநூல்களில் அறஇலக்கியப் பெண்கள் அறம்பாடுதலினை இரட்டைக் காப்பிய பெண்கள் அறம்பாடுதலினோடு ஒப்பிட்டு ஆராய்வது ஆய்வின் நோக்கமாகக் கொள்ளப்படுகிறது.

## இரட்டைக் காப்பியங்கள்

சிலப்பதிகாரம் - இளங்கோவடிகள் - 3 காண்டம் -30 காதைகள்

மணிமேகலை - சீத்தலைச் சாத்தனார் - 30 காதைகள்

இந்நூல்களின் காலம் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு (இருண்ட காலம்) எனக் குறிப்பிடப்படுகிறது. அற இலக்கியங்களின் காலம், ஆசிரியர் பற்றிய அட்டவணை,

| வ. எண் | நூல்கள் | ஆசிரியர்கள் | பாக்கள் | காலம் (கி.பி.) |
|---|---|---|---|---|
| 1 | முதுமொழிக் காஞ்சி | மதுரை கூடலூர் கிழார் | 100 | 2-ம் நூற்றாண்டு |
| 2 | திருக்குறள் | திருவள்ளுவர் | 1330 | 3-ம் நூற்றாண்டு |
| 3 | நான்மணிக்கடிகை | விளம்பிநாகனார் | 101 | 4-ம் நூற்றாண்டு |
| 4 | பழமொழி நானூறு | முன்றுறையரையனார் | 400 | 5-ம் நூற்றாண்டு |
| 5 | இன்னா நாற்பது | கபிலர் | 41 | 5-ம் நூற்றாண்டு |
| 6 | திரிகடுகம் | நல்லாதனார் | 101 | 5-ம் நூற்றாண்டு |
| 7 | இனியவை நாற்பது | பூதஞ்சேந்தனார் | 40 | 6-ம் நூற்றாண்டு |
| 8 | சிறுபஞ்சமூலம் | மாக்காரியாசான் | 97 | 6-ம் நூற்றாண்டு |
| 9 | ஏலாதி | கணிதமேதாவியார் | 81 | 6-ம் நூற்றாண்டு |
| 10 | நாலடியார் | சமணமுனிவர்கள் | 400 | 5,6,7,-ம் நூற்றாண்டுகள் |
| 11 | ஆசாரக்கோவை | பெருவாயின்முள்ளியார் | 100 | 7-ம் நூற்றாண்டு |

## அறம்

அறம் என்பதைக் குறிக்க ‘அறம்பாடு’ என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. சங்க இலக்கியமான புறநானூற்றில் ‘அறம்பாடு இற்றே ஆயிழை கணவ’ என்ற அடியிலிருந்து தெரிந்துகொள்ள முடிகிறது (Manikkam, 2013). மேலும் அறம் என்பது மனதில் குற்றமின்மை போன்ற பல்வேறான பொருள்களைக் கொண்டதாக அமைகிறது. ‘பிறர்க்கு தீங்கு நினையாத மாசற்ற மனத்தால் பொருள் செய்தொழுகும் முறை அறம்’ என்கிறார் ந.சுப்புரெட்டியார் (Subbureddiyar, 1988). (‘Moral Means Good Conduct’ என்பது நல்ல நடத்தைக்குரிய அறத்திற்குரிய என்றும் பொருள் கொள்ளப்படுகிறது. இதனை,

‘அறம் எனப்படுவது யாதெனக் கேட்பின்

மறவாதிது கேள் மன்னுயிர்க் கெல்லாம்

உண்டியும் உடையும் உறையுளும் அல்லது

கண்டதில்’

என்ற அடிகளின் மூலம் மேற்கொள்ள வேண்டிய அறவழிகளைச் சாத்தனார் அடையாளப்படுத்துகிறார். மக்கள் ஒழுக வேண்டிய ஒழுகலாறுகளை ‘அறம்’ என்கிறார் வள்ளுவர். அறத்தை கடைப்பிடிப்பவர் இன்பமாக வாழ்வது கடினம். இதனை,

‘கட்டமை ஒழுக்கத்து கண்ணுமை’ (Ilampurananr, 2008)

என்கிறார் தொல்காப்பியர். அறச்செயல்களை இளமைக் காலத்திலேயே செய்து முடிக்க வேண்டும் என்பது பதிவு செய்யப்படுகிறது.

## இல்லறம்

இல்லற வாழ்க்கையில் கணவன், மனைவி இருவரும் ஒருமனப்பட்டு அறச்செயல்களை செய்து வாழ வேண்டும். ஒத்த மனமுடையவராய் இருவரும் வாழ்ந்தால் இன்ப துன்ப உணர்வுகள், மற்ற மன நிலைகளை ஒருவர்க்கு ஒருவர் மறைத்து வாழத் தேவையில்லை. புரிந்து கொண்டு வாழ்ந்தால் இல்லறம் இனிமையாக அமையும் என்பதை,

‘மனை வாழ்க்கை முன் இனிது மாணாதாமயின்’

என இனியவை நாற்பது செய்யுள் அடி சுட்டுகிறது (Mohan, 2004). இதனை இளங்கோவடிகள் கோவலனும், கண்ணகியும் புகார் நகரில் வாழ்ந்த இல்லற வாழ்க்கையை,

‘வார் ஒலி கூந்தலைப் பேர்இயல் கிழத்தி

மறப்பு அரும் கேண்மையொடு அறப்பரிசாரமும்

விருந்து புறந்தரூ உம் பெரும் தன் வாழ்க்கையும்

வேறுபடு திருவின் வீடு பெறக்காண

உரிமைச் சுற்றமொடு ஒரு தனிப்புணர்க்க'

என இளங்கோவடிகள் பதிவு செய்துள்ளார் (Mohan, 2004). அன்புடன் வாழ்வது இல்வாழ்க்கையின் பண்பு. அறத்தைப் போற்றி வாழ்வது அதன் பயனாகும். இதனை,

'அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை

பண்பும் பயனும் அது'

எனக் குறிப்பிடுகிறார் வள்ளுவர் (Mohan, 2004). துறவறத்தை வள்ளுவரும் வலியுறுத்தவில்லை, ஏனெனில் துறவிகள், வறியவர்கள், யாசிப்பவர்கள் ஆகியோரை போற்றிக் காக்க இல்லறத்தினால் மட்டுமே முடியும். 'இல்லறத்தின் பெருமை, கடமை ஆகியன அறன் வலியுறுத்தல், இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணை நலம், நன்மக்கட்பேறு, விருந்தோம்பல் என்னும் அதிகாரங்களில் அழுத்தமாக எடுத்துரைக்கப்படுகின்றன' என்கிறார் முனைவர் த. நடேசன் (Nadesan, 2017). இல்லறத்தின் சிறப்புகள் இனியவை நாற்பது, குறள், சிலம்பு வழியாக சுட்டிக்காட்டப்படுகிறது. இதனை,

'காமம் சான்ற கடைக்கோட்காலை

ஏமம் சான்ற மக்களொடு துவன்றி

அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்

சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே'

என்ற தொல்காப்பிய நூற்பா வழி அறியமுடிகிறது (Ilampurananr, 2008). இல்லறப் பெண்ணுக்குச் சொல்லப்பட்ட மதிப்புகள் இல்லறத்தை நல்லறமாக்குவனவாக அமைகிறது. இவ்வாறான இல்லற பெருமைகள், கீழ்கணக்கு நூல்கள் இரட்டைக் காப்பியங்கள் வாயிலாக ஒப்பீடு செய்து பார்க்கப்படுகிறது.

## விருந்தோம்பல்

இல்லற வாழ்க்கையில் தமிழரின் தலைசிறந்த பண்பாகப் பார்க்கப்படுவது விருந்தோம்பல். பெண்கள் வீட்டில் தங்கி பொருளைக் காத்து இல்வாழ்க்கை நடத்துவது புதிதாக வரும் விருந்தினரை உபசரிப்பதற்கு என்பது குறிப்பிடத்தக்கது. இதனை,

'நல்விருந்தோம்பல், நட்டாளாம் வைகலும்

இல்புறஞ் செய்தன்'

'இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி

வேளாண்மை செய்தற் பொருட்டு'

என்ற பாடல்கள் வழி அறிய முடிகிறது (Mohan, 2004). தம்மை நாடி வரும் விருந்தினரை இன்முகத்துடன் வரவேற்று அன்போடும், ஆர்வத்தோடும் உபசரிப்பது சிறப்பானது என்பது பதிவு செய்யப்படுகிறது. உறவினரும், நண்பருமின்றி புதிதாக tUgtiuna விருந்தினர் என்று தமிழ் மக்கள் கருதியதை,

'உரன்கெழு நோன்பகட் குழவர் தங்கை

தொடிக்கை மகடூஉ மகமுறை தடுப்ப'

என்ற சிறுபாணாற்றுத் தொடர்கள் வழி அறியமுடிகிறது (Mohan, 2004). விருந்தினருக்கு, புதியவருக்கு உணவளிப்பது இல்லறக் கடமைகளில் பெண்களுக்கு பழியற்ற வாழ்க்கை என்பதை,

'வருநர்க்கு வரையா வசையில் வாழ்க்கை'

என்கிறார் ஊன்பொதி பசுங்குடையார் (Manikkam, 2013). விருந்தளிப்பது பெண்களுக்குச் சுவையான அனுபவம். விருந்து உபசரிப்பவர்களுக்கும், விருந்து உண்டவர்களுக்கும் மனநிறைவை ஏற்படுத்துவதாக அமைகிறது. புதியவர், வறியவர், முதியவர் ஆகியோருக்கு உணவு கொடுத்தல் பெண்களுக்குரிய அறம் என்பதை,

'மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்

உண்டி கொடுத்தோர் உயிர்க்கொடுத் தோரே'

என்கிறார் சீத்தலைச் சாத்தனார். இல்லறப் பெண்கள் தம் கணவருடன் இணைந்து வாழும்போது மட்டும் விருந்தோம்பல் செயலில் ஈடுபட வேண்டுமென்பதை,

'அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்

துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்

விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை'

என்ற கண்ணகியின் வருத்த மொழிகளால் அறிய முடிகிறது. கணவன் இல்லாதபோது விருந்தோம்பல் செய்வது பெண்ணுக்குச் சிக்கலை ஏற்படுத்தும் என்பது தெரிகிறது. உணவு கொடுத்தல் பெண்களுக்குரிய அறம் என்பதை இரட்டைக் காப்பிய பெண்கள், அற இலக்கியப் பெண்களோடு ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## இல்லறத்தில் பெண்களின் பணிகள்

பெண்கள் விடியற்காலையில் எழுந்து வாயிலின்முன் பசுஞ்சாணத்தைத் தெளித்து தூய்மை செய்தல் வேண்டும். இல்லறத்தில் உள்ள குப்பைகளை நீக்குதல், அழுக்கான பாத்திரங்களை கழுவுதல் போன்ற செயல்களில் ஈடுபடவேண்டுமென்பதை,

'காட்டுக் களைந்து கலம் கழீஇ இல்லத்தை

ஆப்பிநீர் எங்கும் தெளித்துச் சிறுகாலை'

என்ற பாடல் விளக்குகிறது. விடியற்காலையில் பெண்களுக்கான பணியைக் குறிப்பிடுவதாக அமைகிறது. பெண்கள் வீட்டில் சமைக்கும்பொழுது அடுக்களையில் தோன்றும் தாளிப்பு மணம் கமழும் புகையானது தென்றலில் கலந்து மணம் வீசுவதை,

'அட்டில் புகையும் அகல் அங்காடி'

என்ற பாடல் வழி அறிய முடிகிறது. பெண்கள் அடுக்களையில் சமைத்த தாளிப்பு மணமானது தென்றலில் கலந்து நறுமணம் வீசும் அளவுக்கு அறுசுவை உணவாக இருந்தது என்பது பதிவு செய்யப்படுகிறது (Mohan, 2004).

அறநெறியில் ஒழுகி நல்ல வழியில் சம்பாதித்த பொருளை வைத்து ஆதிரை உணவினை ஆக்கினாள். அதனை மணிமேகலையின் பிச்சைப் பாத்திரத்தில் இட்டாள். பிச்சைப் பாத்திரமும் பெரிதான சோற்றுத் திரளையினை எப்போதும் வற்றாது சுரத்தலை உடையதாயிற்று. இதனை,

'பிச்சைப் பாத்திரப் பெருஞ்சோற்றமலை

அறத்தின் ஈட்டிய ஒண்பொருள் அறவோன்

வாங்குகை வருந்த மன்னுயிர்க் களித்து'

என்ற பாடல் வழி அறிய முடிகிறது. ஆதிரை சமைத்து இட்ட உணவு மணிமேகலையின் பாத்திரத்தில் பெருஞ்சோற்றுத் திரளை உருவாக்கி அனைத்து உயிர்களுக்கும் உணவளிக்க உதவியது. சுற்றத்தினர், விருந்தினர் ஆகியோரின் பசியினைத் தீர்ப்பது பெண்ணின் கடமை என்பதை,

'விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்

பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்'

என்கிறார் தொல்காப்பியர் (Ilampurananr, 2008). இல்லறப் பெண்களுக்குச் சொல்லப்பட்ட செயல்களாக இரட்டைக் காப்பியங்கள் மற்றும் அற இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளமையை அறிய முடிகிறது.

## இரக்க மனப்பான்மை

குடும்பத்தில் பெண்கள் இரக்கமுடையவபர்களாக இருந்தால் நண்பர்கள், உறவினர்கள் பெருகுவர் என்பதை,

'வன்கண் பெருகின் வலிபெருகும் பான்மொழியார்

இன்கண் பெருகின் இனம்பெருகும்'

என்ற பாடல் வழி அறிய முடிகிறது. பெண்களுடைய இரக்க குணம் உறவு மற்றும் நட்பை வளர்ப்பதாக அமைகிறது. பெருந்தோளினை cila தம் கணவர் விருந்தினருடன் வந்தால் 'மனைவியர்' தம் கணவருடன் ஊடாது வந்த விருந்தினரை இன்முகத்தோடு உபசரித்தனர் என்பதை,

'விருந்தின் தீர்ந்தியது ஆயின் யாவதும்'

என்ற அடி விளக்குகிறது. இல்லறத்திற்குரிய ஒழுக்கத்தினை பெற்றவளாக கண்ணகி இருந்தமையை அறிய முடிகிறது. மணிமேகலை சிறைக்கோட்டத்திற்குச் சென்றுஅங்கு பசியுற்றிருக்கும் பகுத்தறிவில்லாத மக்களுக்கு உணவளித்தாள் என்பதை,

'ஆங்குப் பசியுறும் ஆருயிர் மாக்களை

வாங்கு வையகம் வருந்தநின்று ஊட்டலும்'

என்ற பாடல் வழி அறிய முடிகிறது. ஐந்தறிவுடையவர், பகுத்தறிவில்லாதவர், குழந்தைகள், இயலாதவர்கள், நோயுற்றோர், முதியவர்கள் ஆகியோருக்கு இரக்க மனப்பான்மையுடன் உணவளிப்பது சிறந்த அறமாகப் பார்க்கப்படுகிறது.

'ஆக்கிய உணவை கடவுளுக்குப் படைத்து தேவர், முனிவர், விருந்தினர் ஆகியோருக்கு விருந்தளித்து மீதமுள்ளதையே இல்வாழ்பவள் உண்ண வேண்டும்' என்கிறார் திரிலோக சீதாராம்' (Thiriloga Seetharam, 2000). இல்லறத்தில் பெண் இரக்கமுடையவளாக இருந்தால் பொருளும், புகழும், ஆயுளும், நற்கதியும் கிடைக்கும் என்பது தெரிகிறது.

## அன்பு பாராட்டல்

பெண்கள் புதல்வர், விருந்தினர், சுற்றத்தினர் ஆகியோரிடத்தில் அன்பு காட்ட வேண்டும். பசித்தவர், தவம் செய்கிறவர், குழந்தைகள், கருவுற்ற பெண்கள், அறிவு மயங்கியவர், வாதநோயால் வருந்துகின்றவர் ஆகியோருக்கு உணவளித்துக் காக்க வேண்டுமென்பதை,

'ஈன்றாரீன் காற்றளர்வார் குழார் குழவிகள்

மான்றார் வளியான் மயங்கினார்க் - கானாரென்

றூணீய் துறுநோய் களைந்தார் பெருஞ்செல்வம்

காணீத்து வாழ்வார் கலந்து'

என்கிறார் கணித மேதாவியார். இய்லாதவர்களுக்குப் பெண்களின் அன்பும் அரவணைப்பும் ஆறுதலாக அமைகிறது. கோவலனும் கண்ணகியும் மறக்க இயலாத சுற்றத்தினர், அறவோர், விருந்தினர் ஆகியோரை விரும்பிப் பேணி இல்லறத்தைச் சிறப்பாக நடத்தினார். இதனை,

'விருந்து புறந்தரூஉம் பெருந்தண் வாழ்க்கையும்'

என்ற அடிகள் விளக்குகிறது. கண்ணகி இல்லற வாழ்க்கையில் அறவோர், விருந்தினர் ஆகியோருக்கு விருந்து உபசரித்தமையை அறிய முடிகிறது. மணிமேகலை காயசண்டிகை உருவமேற்று பசிநோயுற்றோர்க்கும், அறச்சாலையில் உள்ளோர்க்கும் உணவளித்தாள் என்பதை,

'ஊர்முழு தறியும் உருவம் கொண்டே

ஆற்றா மாக்கட் காற்றும் துணையாகி'

'அமுத சுரபியை அங்கையின் வாங்குப்

பதியகம் திரிதரும் பைங்கொடி நங்கை'

என்ற பாடல்கள் வழி அறியமுடிகிறது. நோயுற்றவர், இரப்பவர், முதியவர், விருந்தினர், ஆதரவற்ற குழந்தைகள் ஆகியோரிடத்து அன்பு பாராட்டி உணவளிப்பது சிறப்பிற்குரியது விருந்தளிப்பதை,

'விருந்தே தானும்

புதுவது புனைந்த யாப்பின் மேற்றே'

என்கிறார் தொல்காப்பியர். பிற உயிர்களிடத்தில் அன்பு பாராட்டி உணவளிப்பது என்பது பெண்களுக்குரிய அறமாகப் பார்க்கப்படுகிறது.

## முடிவுரை

அற இலக்கியப் பெண்கள் இரட்டைக் காப்பிய பெண்கள் ஆகியோர் அறம்பாடுதலினை இல்லறத்திலிருந்து மேற்கொண்டமையை ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டுள்ளது. அற இலக்கியப் பெண்களும், இரட்டைக் காப்பிய பெண்களும் இல்லறத்தில் மேற்கொண்ட செயல்கள் ஒத்த தன்மையுடையவையாக காணப்படுவதை அறியமுடிகிறது. அவசர உலகில் இயங்கிக் கொண்டிருக்கும் இந்நூற்றாண்டுப் பெண்கள் இளமைக் காலத்திலேயே அறச்செயல்களை மேற்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. அறச்செயல்கள் வாழ்வினை வளப்படுத்துவதற்கு பெண்களுக்கு உறுதுணையாக அமையும் என்பது பதிவு செய்யப்படுகிறது.

## References


Ilampurananr, (2008) Tholkapiyam Porulathikaram, Saradha Pathippagam, Chennai, India

Manikkam, A. (2013) Purananuru Moolamum Uraiyum, Arignar Anna Nurpathippu Kalagam, Chennai, India

Mohan, R. (2004) Pathupattu, New Century Book House, Chennai, India

Nadesan, T. (2017) Ara Ilakiyankalil Thirukuralin Pangu, Saradha Pathippagam, Chennai, India

Subbureddiyar, S. (1988) Tamil Ilakiyankalil Aram, Neethi, Muramai, Thenmalai Pathipagam, Chennai, India

Thiriloga Seetharam, (2000) Manudharma Sasthiram, Alaikal Veliyetagam, Chennai, India



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License